**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

------

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.I, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Case Number | : | CC 32/2013 |
| Prosecution Witness | : | அ.சா.8 |
| Name | : | குணசீலன் |
| Father's/Husband Name: | : | ஆரோக்கியசாமி |
| Address : | : | லால்குடி |
| Age | : | 68 /2024 |

**தேதி: 19 /08/2024**

**முதல் விசாரணை :** சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திருமதி.S.ஜான்சிராணி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது **(எதிரி ஆஜர் இல்லை).**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் பதிவுத்துறையில் மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் A1 பிரிவில் தலைமை எழுத்தராக பணிபுரிந்து ஓய்வுபெற்றுவிட்டேன். சம்பவ காலத்தில் நான் செட்டிக்குளம் சார்பதிவாளர் அலுவலகத்தில் உதவியாளராக பணிபுரிந்தேன். கூடுதல் பொறுப்பாக சார்பதிவாளர் பொறுப்பை வகித்து வந்தேன். 23.06.2008 அன்று நான் சார்பதிவாளராக பணியில் இருந்தபோது சுமார் 44 ஆவணங்களை பதிவு செய்தேன். ஜான்சி என்பவர் பொது அதிகார பத்திரம் ஒன்றை பதிவு செய்தார். என்னிடம் காட்டப்படும் 17.06.2008 தேதியிட்ட ஜெனரல் பவர் பத்திரம் நான் பதிவு செய்த பத்திரம்தான். **17.06.2008 தேதியிட்ட ஜெனரல் பவர் பத்திரம் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இந்த வழக்கு சம்பந்தமாக துணை பதிவு தலைவர் திருச்சி அவர்கள் என்னை விசாரித்தார். அவரிடம் நான்

என்னுடைய வாக்குமூலத்தை எழுதிக்கொடுத்தேன். மாவட்ட குற்றபிரிவு போலீஸார் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

பொதுவாக ஒரு ஆவணம் பதிவுக்கு வரும்போது ஆவணத்தை எழுதிகொடுத்தவரிடம் விசாரணை செய்து அவர் ஒப்புக்கொண்ட பிறகுதான் ஆவணத்தை பதிவு செய்வோம் என்றால் சரிதான். அ.சா.ஆ.6 பவர் பத்திரத்தை முதல்வர் ஜான்சி எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான். அ.சா.ஆ.6 பவர் பத்திரத்தை பதிவு செய்தபோது ஜான்சி என்பவரை விசாரித்துதான் பதிவு செய்தேன் என்றால் சரிதான். பதிவு செய்தபோது அடையாள அட்டை மற்றும் பதிவுக்கு சம்பந்தப்பட்ட ஆவணங்களை சரிபார்த்த பின்புதான் பதிவு செய்தேன். அ.சா.ஆ.6 பவர் பத்திரம் மாலை 3.00 முதல் 4.00 மணிக்கு பதிவு செய்ய கொடுத்தேன். பதிவு செய்யும் ஆவணங்களை அன்றையே தினமே ஸ்கேன் செய்துவிடுவோம் என்றால் சரிதான். பதிவு சம்பந்தப்பட்ட நடைமுறைகள் முடியும் வரை ஆவணங்கள் எங்களுடைய அலுவலகத்தில்தான் இருக்கும். அ.சா.ஆ.6 பவர் பத்திரத்தை அன்றைய தினமே ஸ்கேனிங் செய்துவிட்டோம். என்னுடைய அலுவலகத்தில் அலுவலக உதவியாளராக பிச்சைமுத்து என்பவர் பணியில் இருந்தார் என்றால் சரிதான். பிச்சைமுத்து என்பவருக்கு மேற்படி பவர் பத்திரம் பதிவு செய்தது பற்றி தெரியுமா என்றால் தெரியாது. அ.சா.ஆ.6 பவர் பத்திரம் எங்களிடம் தாக்கல் செய்யப்பட்டதில் எவ்வித மாற்றமும் செய்யவில்லை என்றால் சரிதான்.

Taken down by / before me in open court
read over/interpreted to the witness
in the presence of the accused/accused/
pleader and admitted by the witness to
be correct.

Sd/-

Judicial Magistrate No.I,
Perambalur.

JUDGMENT PUBLISHED / LIVE LAW BLR watermark